பக்கங்கள்:-14

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 21 | ஞாயிற்றுக்கிழமை | 06.08.2023 | அதிர்வு 05

## ஏழு பிள்ளைகளின் தந்தையார் கிரானில் யானை தாக்கிப் பலி!

வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத் துக்குட்பட்ட கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் வடமுனை பகுதியில் யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஏழு பிள்ளைக ளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவாழைச்சேனை பொலிஸார் 03

### கடன் மறுசீரமைப்பு பணிகள் சீர்குலைந்தால்

# வங்கி முறைமை ஒரு வாரத்தில் சீர்குலையும்!

### ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை



**கொழும்பு, ஒகஸ்ட் 06**

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் கடன் மறுசீரமைப்பு பணிகள் சீர்குலைந்தால் ஒரு வாரத்திற்குள் வங்கி முறைமை வீழ்ச்சியடையும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார். 06


## நேற்று முன்தினம் மட்டும் விபத்துகளில் ஐவர் பலி!



நாட்டின் பல்வேறு பகுதி களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்து களில் பெண் ஒருவர் உட்பட 5 பேர் 03

## ரயிலுடன் மோதுண்டு இளம் பெண் மரணம்

**புங்கன்குளம் அருகே சம்பவம்**



யாழ்ப்பாணம் புங்கன்குளம் ரயில் நிலை யத்திற்கு அருகில் ரயிலுடன் மோதுண்டு பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

அரியாலை பகுதியை சேர்ந்த திலீ பன் பிரியா (வயது 27) எனும் பெண்ணே உயிரிழந்துள்ளார். 03

## பொலிஸ் அதிகாரம் மலையகத்துக்கு அவசியமில்லை!

### திகாம்பரம் கூறுகின்றார்



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடாகும் 02

## மின் கட்டணம் இந்த ஆண்டில் கூடவே கூடாது



நடப்பு வருடத்தில் மின்கட்டணத்தில் எவ்வித அதிகரிப்பும் மேற்கொள்ளப்படமாட்டாது என இலங்கை 12



## தமிழர் விடயத்தில் இதயசுத்தியோடு இந்தியா இல்லை!

### சிறிதரன் எம்.பி. ஆதங்கம்

-எஸ்.நிதர்ஷன்-

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தச் செய்வதில் இந்தியா நேர்மையாக – இதயசுத்தியோடு 06



## இரகசியம்

2005 ஜனாதிபதி தேர் தலில் தமிழ் மக்களை வாக்களிக்க வேண்டாம் என்று புலிகள் விடுத்த அறி விப்பு தமக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத்தும் எனக் கருதிய ரணில் விக் கிரமசிங்க, 02

# ‘மலையகம் - 200’ பேரணியில் இன்று அம்பாறை சிவில் சமூகம் இணைகிறது

(வடிவேல் டினேஸ்)

**‘மலையகம் - 200’ பேரணி தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரை மலையக மக்களின் வலி நிறைந்த வாழ்க்கையை நினைவு கூர்ந்து இடம் பெற்று வருகின்றது.**

**இதற்கு ஆதரவு வழங்கும் வகையில் அம்பாறை மாவட்ட சிவில் சமூகத்தினர் தாம் இன்று மதவாச்சி முதல் மிஹிந் தலை வரை இடம் பெறும் மலையகம் 200 பேரணியில் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவித்தனர்.**



மேலும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சிவில் சமூகத்தினர் இணைந்து நடத்தும் பேரணி எதிர்வரும் 08 ஆம் திகதி மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக் கழகத்தில் இருந்து மட்டக்களப்பு காந்தி பூங்கா வரையில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்டசிவில்சமூகத்தின்பிரதிநிதிகள்தெரிவித்தனர்.

அன்றையதினம் மட்டக்களப்பு அமெரிக்கா மிஷனில் மலையகம் தொடர்பான விசேட செயலமர்வு ஒன்றும் இடம் பெறவுள்ளதாக நேற்று அக்கரைப் பற்றில் இடம் பெற்ற ஊடவியலாளர் சந்திப்பில் அம்பாறை மாவட்ட சிவில் சமூகத்தின் ஒருங்கிணைப்பாளர் ரா.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதன் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் இது தொடர்பில் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

வலி நிறைந்த மலைகய மக்களின் எதிர்கால வாழ்வு சுதந்திரத்துடனும் அமைதியாகவும் இருக்கும் முகமாக அவர்கள் இலங்கை வந்து 200வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு “மலையகம் – 200” பேரணி இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புகளின் முடிவை மறு பரிசீலனை செய்து, தமிழ் மக்களை வாக்களிக்க அனுமதிக்கும்படி வேண்டுமாறு கோரி, அந்தச் செய்தியுடன் என்னை வன்னிக்கு அனுப்பி வைத்திருந்தார். அது பற்றி கடந்த மூன்று நாள்களாக இப்பத்தியில் விவரித்து இருந்தேன். இன்றும் அதன் விவரங்களைத் தொடர்கிறேன்.

தமது முடிவை மாற்ற முடியாது என்று புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் என்னிடம் வலியுறுத்திக் கூறிய போது நான் அவரிடம் ஒரு கேள்வி எழுப்பினேன்.

“சரி தம்பி, உங்களின் அல்லது தமிழ் மக்களின் வாக்குகள் இன்றியே இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்று ஜனாதிபதியானால் அதன் பின்னர் அவருடன் எப்படி நீங்கள் ஊடாட முடியும் ?” – என்று நான் கேட்டேன்.

சிரித்தார் தமிழ்ச்செல்வன். அவர் சொன்ன பதில் என் காதுக்குள் இப்போதும் தெளிவாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

“அண்ணே! நாங்கள் எங்கள் மக்களை வாக்களிக்கக் கோரினால் ரணில் விக்கிரமசிங்க சுமார் மூன்று லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெல்லுவார். நாங்கள் மக்களை வாக்களிக்க வேண்டாம் என்று வலியுறுத்தினால் ரணில் விக்கிரமசிங்க சுமார் 2 லட்சம் வாக்குகள் வித்தி யாசத்தில் தோற்பார்.” – என அடித்துக் கூறுமாற் போல தமிழ்ச்செல்வன் பதில் சொன்னார்.

நான் வன்னியிலிருந்து கொழும்புக்குத் திரும்பினேன். தேர்தல் முடிந்த போது ரணில் விக்கிரமசிங்க ஒரு லட்சத்து 81 ஆயிரம் வாக்குகளால் தோற்றுப் போயிருந்தார்.

தேர்தல் முடிவுகள் தொடர்பில் விடுதலைப் புலிகளின் கணக்கீடு எவ்வளவுகனகச்சிதமாகஇருந்ததுஎன்பதைதேர்தல் முடிந்து மூன்று, நான்கு மாதத்தில் புதிய ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவே என்னிடம் சிலாகித்துக் கூறினார். அது பற்றி இந்த எழுத்துத் தொடரின் கடைசியில் குறிப்பிடுகிறேன்.

இப்போது மீண்டும் பழைய விடயத்துக்கு வருவோம்.

கொழும்பு திரும்பிய நான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உறுதி அளித்தபடி வன்னியில் புலிகளின் தலைமையோடு தொலைபேசியில் தொடர்ந்து உரையாடினேன். மக்களை வாக்களிக்க அனுமதிக்குமாறு என் வற்புறுத்தல்கள் அமைந்தன.

அந்த சமயத்தில்தான் – தேர்தலுக்கு மூன்று, நான்கு நாள்களுக்கு முன்னர் – தமிழ்ச்செல்வனிடமிருந்து எனக்கு ஓர் அழைப்பு வந்தது.

“அண்ணே! நீங்கள் தொடர்ந்து அலுப்புத் தந்ததால் அந்த விடயம் குறித்து மேல் மட்டத்தில் திரும்பவும் ஆராய்ந்தோம். ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். உங்களுக்குத் தெரிவித்து நடவடிக்கை எடுக்குமாறு தலைவர் கூறியுள்ளார். ரணிலின் முன்னைய அரசு கலைக்கப்படும் முன்னர் நாங்கள் அவரது அரசுடன் நடத்திய ஆறு சுற்றுப் பேச்சுக்களின் ஒரு தொடராக எங்களினால் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை (ISGA) பற்றிய ஒரு திட்டம் கையளிக்கப் பட்டது. தான் ஜனாதிபதியானால் அந்தத் திட்டத்தை புலிகளுக்குச் சாதகமாகத் தான் பரிசீலிப்பார் என்று தெரிவிக்கும் ஓர் உறுதிப்பாட்டுக் கடிதத்தை ரணிலிடம் பெற்றுக் கொள்ளுங்கள். அதை எங்களிடம் தரத் தேவை இல்லை. பொதுவானவராக நீங்களே வைத்துக் கொள்ளலாம். அந்தக் கடிதம் கிடைத்ததாக நீங்கள் உறுதிப்படுத்தினால் எங்கள் மக்களை 2004 பொதுத்தேர்தலில் வாக்களித்தமை போல இத்தேர்தலிலும் வாக்களிக்கும் படி நாங்கள் உற்சாகப்படுத்தி தூண்டுவோம். இந்தச் செய்தியை ரணிலுக்குத் தெரிவித்து, பதிலை அறிவியுங்கள்!” – என்றார் தமிழ்ச்செல்வன்.

எனக்கு மிகுந்த சந்தோசம். தகவல் கிடைத்ததும் எங்கள் பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் சரவணபவனையும் கூட்டிக்கொண்டு ரணிலின் இல்லத்துக்கு முன்னிரவு நேரத்தில் விரைந்தேன்.

அச்சமயம் ரணில் வெளியூர் ஒன்றில் (இரத்தினபுரி என ஞாபகம்) தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார். ‘வன்னியிலிருந்து நம்பிக்கை தரும் செய்தியோடு வித்தியாதரன் வந்திருக்கிறார். விரைந்து வாருங்கள்!’ – என்று தேர்தல் வேட்பாளர் ரணிலுக்கு அறிவிக்கப்பட்டது. தாம் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த வெளியிடத்திலிருந்து ரணில் ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்கு விரைந்து வந்தார். நாங்கள் இருவரும் ரணிலை நள்ளிரவுக்குச் சற்று முன்பதாக அவரது கொழும்பு இல்லத்தில் சந்தித்தோம்.

எனக்கு இன்னமும் நன்கு ஞாபகமாக இருக்கிறது. சரவணபவன்தான் பேச்சை ஆரம்பித்தார்.

“லீடர்! வன்னியிலிருந்து மகிழ்வான செய்தி ஒன்றை வித்தியாதரன் பெற்று வந்திருக்கிறார்” – என்று அவர் ஆரம்பித்தார்.

நான் விடயத்தைக் கூறத் தொடங்கினேன்

ஆனால் ரணிலின் முகத்தில் திருப்தி அல்லது மகிழ்ச்சி ரேகைகள் தென்படவில்லை. நான் கொண்டு வந்த செய்தி அவரது முகத்தில் மாற்றத்தைத் தரவில்லை. மாறாக, அவர் ஏதோ வெற்றி உறுதியானவர் போல பிரதிபலிப்புகளைக் காட்டினார். இறுமாப்புடன் பேசுகிறார் என்று எனக்குத் தோன்றியது.

நான் அப்படி ஒரு கடிதம் தர மாட்டேன் என்று அப்பட்டமாக அவர் பதிலளிக்கவில்லை. மாறாக, தென்னிலங்கை அரசியல் நிலைமை – கள நிலைவரம் – தேர்தலில் தமக்குப் பெரும் சாதகமாக இருப்பதாக புள்ளி விவர அடிப்படையில் கோடி காட்டினார்.

இரத்தினபுரியில் 70 வீதம், காலியில் 65 வீதம், அம்பாந்தோட்டையில் 78 வீதம், கொழும்பில் 80 வீதம் என்றெல்லாம் தமக்குக் கிடைக்க கூடிய வாக்குகளின் கணிப்பீடுகளை வரிசையாக அடுக்கினார் அவர். நான் இப்போது குறிப்பிடும் வீதக் கணக்கில் அவர் சொன்னாரா என்பது எனக்கு சரியாக நினைவில் இல்லை. ஆனால் அவர் குறிப்பிட்ட இடங்களில் எல்லாம் பெருவெற்றி தமக்கு உறுதி என்ற நிலைப்பாடு அதில் பிரதிபலித்தது.

அதாவது புலிகளின் – தமிழர்களின் – வாக்குகள் இல்லாமலேயே என் வெற்றி உறுதி, பிறகு ஏன் நான் புலிகளின் நிபந் தனைக்கு இணங்கி க் கடிதம் ஒன்றைத் தர வேண்டும்? – என்ற பாணியில் ரணிலின் பதில் இருந்தது.

சற்று நேரம் அவரோடு பேசிக்கொண்டு இருந்து விட்டு நாங்கள் புறப்பட்டோம். என் சமரச எத்தனம் – முயற்சி – அத்தோடு முடிவுக்கு வந்தது. ரணிலின் பதிலை தமிழ்ச்செல்வனுக்கு தெரியப்படுத்திய தோடு விடயத்தில் என் பங்களிப்பை முடித்துக் கொண்டேன்.

ரணிலைச் சூழ்ந்திருந்த சிலர் – ஒரு முக்கிய பத்திரிகையாளர் உட்பட – வடக்கு, கிழக்குத் தமிழர்களின் வாக்குகள் இன்

(6ஆம் பக்கம் பார்க்க...)

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதித்துறையின் பிரதிபலிப்புஎன்ன?

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் கடன் மறு சீரமைப்புப் பணிகள் சீர்குலைந்தால் ஒரு வார காலத்துக்குள் நாட்டில் வங்கி நடைமுறை வீழ்ச்சி அடையும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

நேற்று முன்தினம் பகிரங்க நிகழ்வொன்றில் வைத்து இந்த எச்சரிக்கையை அவர் விடுத்திருகின்றார்.

இதே சமயம் அரசாங்கத்தின் நிதி நிர்வாக விடயங்களைக் கையாளும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உண்டு, அது விடயத்தில் வேறு தரப்புகளின் நிபந்தனைகளையோ, வழிகாட்டல்களையோ ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று மற்றொரு பொது நிகழ்வில் வைத்து சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

அவரது அரசு உள்நாட்டுக் கடன் மறு சீரமைப்புத் தொடர்பாக எடுத்துள்ள முடிவுகள் உயர்நீதிமன்றத்தில் சட்டச் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்ற நிலையில், இத்தகைய கருத்துக்களை அவர் வெளியிட்டு வருகின்றார்.

பிற தரப்புக்களின் வழிகாட்டுதல்களையோ ஆலோசனைகளையோ ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்ற அவரது அறிவிப்பு, இவ்விடயத்தில் அவரது அரசுக்கு உயர்நீதிமன்றம் வழங்கக்கூடிய பாதகமான உத்தரவை, வராமல் தடுப்பதற்கான முன்னேற்பாட்டு எச்சரிக்கை என்பதை நேற்று இப்பத்தியில் சுட்டிக் காட்டி இருந்தோம்.

இப்போது அரசாங்கத்தின் கடன் மறு சீரமைப்பு நடவடிக்கைகள் சீர்குலைந்தால் ஒரு வாரத்துக்குள் நாட்டில் வங்கி முறைமையே வீழ்ச்சி அடையும் என்று அடுத்த எச்சரிக்கையை உயர் நீதிமன்றத்திற்கு கோடி காட்டி இருக்கின்றார் அவர்.

உள்நாட்டுக் கடன் மறு சீரமைப்புத் தொடர்பான விடயத்தில் தனவந்தர்கள், கொழுத்த - கொள்ளை லாப மீட்டும் - முதலாளிமார்கள் போன்றோரின் பாதிப்புகளை தவிர்த்து, அவர்களைக் காப்பாற்றி, அப்பாவி ஊழியர்களின் சேமலாப நிதியத்தில் சூறையாடும் விதத்தில் அவரது அரசு எடுத்த முடிவு, உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்படுகின்ற நிலையில், இத்தகைய எச்சரிக்கைகளை முறையற்ற விதத்தில் அவர் பகிரங்கமாக வெளியிட்டு வருகின்றார்.

இலங்கை போன்று நிதி நெருக்கடிக்குள் சிக்கி, கடன் மீளளிக்க முடியாமல் போன எட்டு நாடுகள் முன்னர் தங்கள் கடன் செலுத்தகையை இலங்கை போல மறுசீரமைப்பு செய்திருக்கின்றன. அவற்றில் ஏழு நாடுகள் உள்நாட்டு கடன் மறு சீரமைப்பு விடயத்தில் ஊழியர்களின் சேம்லாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற சமூக நிதியங்களில் கை வைக்காமலேயே அந்தக் கடன் மறு சீரமைப்பைச் செய்திருக்கின்றன. ஒரே ஒரு நாடு மாத்திரம் ஏனைய உள்நாட்டு கடனோடு ஊழியர் நிதியத்தில் பெற்ற கடனையும் சேர்த்து, எல்லாவற்றிலும் சமமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் மறுசீரமைப்பைச் செய்துள்ளது.

இலங்கை மட்டுமே உள்நாட்டுக் கடன் சீரமைப்பில் ஊழியர்களின் சேமலாப நித்தியத்தை - அப்பாவிகளின் சேமிப்பை மாத்திரம் - சூறையாடும் அநாகரிகத் திட்டத்தை வகுத்திருக்கின்றது.

அது இப்போது உயர்நீதிமன்றத்தில் பிய்த்துதறப்படும் சூழல் உருவாகி இருப்பதால், முற்கூட்டியே நீதித்துறைக்கு சவாலும் எச்சரிக்கையும் விடும் கைங்கரியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சாதுரியமாக முன்னெடுக்கிறார்

அவரது அச்சுறுத்தலுக்கு - அடுத்ததுக்கு முறையற்ற கருத்து பிரயோகத்துக்கு - நீதிதுறை அல்லது உயர் நீதிமன்றம் இலகுவில் எடுபடாது என நம்புவோமாக!

## ரயிலுடன் மோதுண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றைய தினம் சனிக் கிழமை மதியம் கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலுடன் மோதியே இவர் உயிரிழந்துள்ளார்

## நேற்றுமுன்தினம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளனர்.

எம்பிலிபிட்டிய, கலகெதர, வாகரை, திக்வெல்ல மற்றும் அக்கராயன்குளம் ஆகிய பகுதிகளில் இந்த விபத்துகள் பதிவாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எம்பிலிபிட்டிய மித்தெனிய வீதியில் ஒட்டோ ஒன்று வீதியைவிட்டு விலகி பஸ் தரிப்பிடத்தில் மோதி விபத்துக் குள்ளானதில் சாரதி உயிரிழந்துள்ளார். பெண் பயணி ஒருவர் காயமடைந்துள்ளார்.

அத்துடன், கலகெதர கந்தகும்புர பிரதேசத்தில் கப் ரக வாகனத்தின் பின் இருக்கையில் பயணித்த ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

வாகரை பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று வீதியை விட்டு விலகி தொலைபேசி கம்பத்தில் மோதியதில் 20 வயதுடைய இளைஞன் உயிரிழந்துள்ளார். அக்கரா யமன்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் மீது கப் ரக வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார்.

இதனிடையே, திக்வெல்ல நகருக்கு அருகில் வீதி யைக் கடக்க முற்பட்ட 84 வயதுடைய பெண் ஒருவர் காரில் மோதி உயிரிழந்துள்அர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## ஏழு பிள்ளைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தனர்.

வடமுனை நாகதம்பிரான் வீதி சேர்ந்த பெருமாள் ராமூ விமலன் (வயது 69) என்ற ஏழு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மாலை 6.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நோய்வாய்பட்டிருந்த தனது தாயாருக்கு தேவையான குளிசையை அருகிலுள்ள வெலிக்கந்தை கிராமத்திற்குச் சென்று அவர் கொள்வனவு செய்து திரும்பும் வழியில் காட்டுப்பகுதியில் நின்ற யானை அவரை தாக்கியுள்ளது.

யானையில் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த வர் வெலிக்கந்தை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரியின் கட்டளையின் பிரகாரம் சடலம் பிரேத பரிசோதனை மேற்கொண்டதன் பின்னர் உறவி னர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வடமுனைப் பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது. பலர் யானை யின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். யானைகளிடமி ருந்து தங்களைப் பாதுகாத்து தருமாறு பிரதேச மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

## பொலிஸ் அதிகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என அதன் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

எனினும், மலையகத்துக்கு பொலிஸ் அதிகாரம் அவசி யமில்லை எனவும், வடக்கு, கிழக்கு மக்களுக்கு இந்த அதிகாரம் கிடைக்கப்பெறுவதை தான் எதிர்க்கவில்லை எனவும் அவர் கூறினார்.

வடக்கு, கிழக்கு மக்களை காட்டிக்கொடுக்க நாம் தயா ரில்லை, அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அதற்கு நாம் எதிராக இருக்கமாட்டோம் எனவும் பழனி திகாம்பரம் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஜனாதிபதி ரணிலும், எதிர்க்கட்சி தலை வர் சஜித்தும் இணைந்தால் அது சிறப்பாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ‘13’ தொடர்பில் மோடி கூறியவை ரணிலுக்கு நன்கு விளங்கியிருக்கும்

## விக்னேஸ்வரன் எம்.பியின் நம்பிக்கை இது



**யாழ்ப்பாணம், ஒக. 06**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்ற போது பிரதமர் மோடி 13 தொடர்பில் கூறியவை அவருக்கு (ரணிலுக்கு) நன்கு விளங்கியிருக்கும் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 வது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போது அவரது உரை எவ்வாறு இருக்கும் என ஊடகவியலாளர் விக்னேஸ்வரனிடம் கேள்வி எழுப்பினார்.

இதன்போது, பதில் அளித்த விக்னேஸ்வரன், ரணிலின் உரை எவ்வாறு இருக்கும் என்பது குறித்து அவர் உரையாற்றிய பின்னரே கருத்து கூற முடியும்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்தியப் பிரதமர் மோடி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரிலே தெரிவித்துவிட்ட நிலையில், நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடு எவ்வாறு இருக்கும் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நானும் கலாநிதி விக்னேஸ்வரனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெளிவான வரைவு ஒன்றை வழங்கிய நிலையில் அது பற்றி இந்தியப் பிரதமர் மோடியுடன் ஜனாதிபதி ரணில் பேசினார்.

13 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது கம்மன்பில போன்ற சிலர் முதல் ஒரு கருத்தை கூறுவார்கள், பிறகு ஒரு கருத்தை கூறிக் குழப்புவார்கள் என்பது எமக்குத் தெரியும்.

இலங்கை அரசலமைப்பில் உள்ளடக்கப்பட்ட – இரு நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட – உடன்படிக்கையை ஏற்க முடியாது என எளிதில் தட்டிக் கழித்து விட முடியாது.

இறுதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோது 13 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து சிலர் எதிர்க்கிறார்கள் எனக் காரணம் காட்டி பின் வாங்கக் கூடாது என அவரிடம் கூறினேன்.

அன்றைய சந்திப்பில் சிங்களத் தலைவர்கள் என்னுடன் கலந்துரையாடிய போது, நான் முன்வைத்த இந்திய பாண்டிச்சேரியில் நடைமுறையில் உள்ள பட்டன் பொல்லுடனான பொலிஸைத் தாங்கள் ஏற்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

ஆனால் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் அது பற்றி என்னிடம் பேசவும், இல்லை ஜனாதிபதியின் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கவும் இல்லை.

13 வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் உரித்துடையதல்ல. இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணத்திற்கும் பொதுவான விடயம்.

நான் அறிந்த வரையில் பெரும்பான்மை சிங்கள மக்களைக் கொண்ட மாகாணங்களில் பொலிஸ் அதிகாரத்தை விரும்புகின்ற நிலையில் அவர்களின் கட்சி சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

ஆகவே இந்த விடயம் தொடர்பில் இந்தியப் பிரதமர் கூறிய விடயங்களை ரணில் விக்கிரமசிங்க தெளிவாக உள்வாங்கி இருப்பார் என்று நம்பிக்கையுடன் நாடாளுமன்றத்தில் என்ன செய்யப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# அம்பாறை ஊடகவியலாளர் குடும்ப ஒன்று கூடல்

(ஏ.எல்.எம்.)

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் வருடாந்த குடும்ப ஒன்று கூடலும், பொதுச் சபைக் கூட்டமும் நிந்தவூர் ரிலெக்ஸ் கார்டன் விருந்தினர் விடுதி யில் நடைபெற்றன.

வருடாந்த ஒன்று கூடல் ஏற்பாடுக் குழுவின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் யூ.எம்.இஸ்ஹாக் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில், ஐக்கிய இராஜ்ஜியத்தில் வசிக்கும் சம்மேளன ஸ்தாபக உறுப்பினரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான மீரா. அலிரஜாய் சிறப்பு அதிதி யாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் சம்மேளனத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் மீரா. எஸ்.இஸடீன், சம்மேளன ஆலோசகரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம் ஆகியோர்




சிறப்புரைகள் ஆற்றினர்.

சம்மேளன செயலாளர் எம்.எம்.ஏ.சமட் நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளையும் முன்னெடுத்தார்.

நிகழ்வின் விசேட அம்சமாக சிறப்பு அதிதியும், ஐக்கிய இராச்சியத்தில் வசிப்பருவமான ஊடகவியலாளர் மீரா அலிரஜாய்வின் அனுசரணையில் சம்மேளன உறுப்பினர்களுக்கான சீருடைகள் வழங்கப்பட்டன.

உறுப்பினர்களுக்கான சம்மேளன ஊடக அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை நீண்டகாலமாக சம்மேளன வளர்ச்சிக்குப் பங்களிப்புக்களை வழங்கிவரும், ஊடகவியலாளர் மீரா அலிரஜாய் நிகழ்வில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்த ஊடவியலாளர் மீரா றப்ஸான் – பாத்திமா நுஸ்ரத் தம்பதியினருக்கு வாழ்த்து மடல் மற்றும் நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

# பெரும் போகத்தில் உரம் இலவசமாம்!



அடுத்த பெரும் போகத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் பண்டி உரம் (ஆமீ) பரிந்துரைக்கப்படும் தொகை முழுவதும் இலவசமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதவிர, மற்றொரு ரக உரத்தின் விலையை குறைக்கவும், உர விநியோகத்தில் இருந்து அரசாங்கம் விலகி, உரத்தினை கொள்வனவு செய்வதற்கு தேவையான பணத்தை விவசாயிகளின் வங்கி கணக்கில் வைப்பிலிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது பன்னிரண்டு லட்சம் நெல் விவசாயிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# '13'ஐ முழுமையாகப் பெற கடைசி சந்தர்ப்பம் இது!

## கைவிடக் கூடாது என்கிறார் இரா.துரைரத்தினம்

(ஏ.எல்.எம்.)

இன்றைய சந்தர்ப்பத்தை தமிழர்கள் கை நழுவ விட்டால் இந்தியா இனி தமிழர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமா என்பது கேள்விக் குறியாகும் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) இரா.துரைரெத்தினம் தாம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

1987 ஆம் ஆண்டு ஜுலை 29 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் முழு இலங்கையிலும் ஒன்பது மாகாணங்களிலும் மாகாண நிர்வாகங்கள் உருவாக்கப்பட்டு சிங்களப் பகுதியிலுள்ள மாகாண சபைகளில் அந்த மக்கள் பிரதிநிதிகள் ஊடாக கூடுதலான நியதிச் சட்டங்களை உருவாக்கி பல அதிகாரங்களுடனும், வடகிழக்கு மாகாண சபைகளில் மிகக் குறைந்த நியதிச் சட்டங்களை உருவாக்கி குறைந்த அதிகாரங்களுடனும் மாகாண சபை நிர்வாகம் இயங்கி வருகின்றது.

மூன்று தசாப்தங்களுக்கு முன் மக்கள் பிரதிநிதிகள், அரசியற்கட்சிகள் ஒரு பலமான நிலையில் இருந்ததன் காரணமாக ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்ள முடியாது, சுயாட்சி அவசியம் எனக் கூறிக் கொண்டு மாகாணசபை முறைமைக்கு ஒரு சில கட்சிகளைத் தவிர, சில கட்சிகள் மௌனம் சாதித்து வந்தன.

36 வருடங்களுக்குப் பின் தற்சமயம் இந்தியாவின் வழி நடத்தலிலும், சர்வ தேசத்தின் ஆளுமைமிக்க கருத்துக்களுடனும், தென்னிலங்கையிலுள்ள சில கட்சிகளைத் தவிர ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்புடனும், வடகிழக்கிலுள்ள பெரும்பாலான கட்சிகள் அனைத்தும் தற்காலிகமாகவேனும் அரசமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தச் சட்டம், மாகாணசபை முறைமையை அமுல் படுத்த வேண்டுமானால் 13 தான் ஒரே வழி எனத் தீர்மானித்த நிலையில், கடந்த வாரம் இலங்கை அரசும், இந்திய அரசும் பேசிக் கொண்டதற்கிணங்க 13ஆவது திருத்தச் சட்ட அரசியல் யாப்பிலுள்ளவற்றை அமுல்படுத்துவதற்கு நல்ல சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளது.




இச் சூழ்நிலையை பயன்படுத்தி 13 அமுல்படுத்துவதற்கு தமிழ்த் தலைமைகள் மிகவும் ஆணித்தரமாக செயல் வடிவம் கொடுப்பதற்கு கருத்துக்கள் கூறுவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

செயல்வடிவம் கொடுப்பதற்கு துணிந்து செல்ல மக்கள் உங்களுக்குத் துணையாக நிற்பார்கள். ஒரு சிலரின் கருத்துக்கள் கூட மக்களுக்காக மாற்றமடையும். உள்ளதை அமுல்படுத்துவதற்கும், வலுச் சேர்ப்பதற்கும் இல்லாதவற்றைக் கேட்டுப் பெறுவதற்கும் முயற்சிகள் எடுப்பது மக்களால் வரவேற்கப்படுகின்றது. - என தெரிவித்துள்ளார்.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சங்கானையில் நேற்றுக் கவனவீர்ப்பு




"சங்கமித்தை வரவும் இல்லை, இங்கு அரசமரம் நடவும் இல்லை" என்று வற்புறுத்தியும் பறாளை முருகன் ஆலயத்திலுள்ள அரச மரம் தொல்லியல் அடையாளமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு எதிராகவும், தமிழர் பகுதியில் தொல்லியற் திணைக்களத்தால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் சங்கானை பஸ் நிலையத்திற்கு எதிரே நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் பொதுமக்கள் கலந்து கெண்டனர்.

# வரணி விபத்தில் இருவர் காயம்



கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி, கறுக்காய் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேககட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் நடந்து சென்ற வயோதிபர் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த இருவரும் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் போராட்டத்துக்கு மீண்டும் ஜே.வி.பி. முஸ்தீபு

நீர்க் கட்டண அதிகரிப்புக்கு எதிராக உடனடியாக மக்கள் அணிதிரளத் தொடங்குவார்கள் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார அழுத்தம், மருந்துப் பொருள்கள் தொடர்பான பிரச்சினை மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றம் என்பவற்றினால் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் வர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மக்களை நெருக்கடி நிலைமைக்கு தள்ளுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



மக்கள் மீதான இந்த அனைத்து அழுத்தங்களுக்கும் எதிராக வாழும் உரிமையைக் கோரி மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கத் தயாராக இருப்பதாகவும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழர் விடயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் 35 வருடங்களாக அதை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் அரசியற் தீர்வொன்றை வழங்கி, நிம்மதியாக வாழக் கூடிய சூழலை முதலில் இந்தியா ஏற்படுத்த வேண்டும். அதைவிடுத்து அபிவிருத்தி திட்டங்களை அறிவிப்பதன் ஊடாக தமிழ் மக்களுக்கு அரசியற் தீர்வு கிடைக்குமென்று நாங்கள் நம்பவில்லை என்றார் அவர்.

சுழிபுரம் பறளாய் முருகன் ஆலயத்திலுள்ள அரச மரத்தைத் தொல்லியல் அடையாளமாகப் பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானிக்கு எதிராகவும், அந்த வர்த்தமானியை மீளப்பெற வலியுறுத்தியும் நேற்று நடைபெற்ற கண்டப் போராட்டத்தில் கலந்து கொண்ட சமயம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது..

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையிலே இந்தியாவிற்குச் சென்ற போது தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே புதிய பாலம் அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டதாகவும், அது சம்பந்தமாக இப்போது பேச்சுகள் நடைபெற்று வருகின்றன எனவும் செய்திகள் வெளிவருகின்றன.

அந்த விடயத்திலே எங்களுக்கு எந்த விதமான எதிர்மனப்பாங்கும் இல்லை. அப்படியொரு பாலம் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் அமைக்கப்படுகிறதென்றால் நாங்கள் அதனை வரவேற்கிறோம். ஆனால் இந்த நிலைமைகளின் மத்தியில் ஒரு விடயத்தை இந்தியாவும் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர்கள் சார்பாகவும் தமிழர்களுடைய பிரதிநிதியாகவும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்திலே இந்தியா கையொப்பம் இட்டிருந்தது. அதுவும் தமிழர் தரப்பாகத்தான் அவர்கள் ஒப்பம் இட்டிருந்தார்கள். அந்தக் காலகட்டத்திலே 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகக் கொண்டு வரப்பட்ட தீர்வுகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஆனால், பொறுப்பு வாய்ந்த ஒரு தரப்பு என்ற வகையிலே இந்தியாவினால் நேர்மையாக இதய சுத்தியோடு அது நடைமுறைப்படுத்தப்படவில்லை அல்லது செய்யவில்லை என்ற ஆதங்கமமும் கேள்வியும் தமிழ் மக்களிடம் நீண்ட காலமாக இருக்கின்றது.

புதிதாக நாங்கள் பாலம் அமைக்கிறோம், எண்ணெய்க குழாய்களைக் கொண்டு வருவோம் என்பது தமிழர்களுக்கான அரசியல் தீர்வை அது தருவதாக அமையாது.

ஆகவே முதலிலே 35 வருடங்களுக்கு முன்னர் எழுதுப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக வடக்கு கிழக்கிலே பொலிஸ், காணி அதிகாரங்கள் உள்ளிட்ட ஓர் அதிகாரப் பகிர்வின் அடிப்படையாகக் கொண்டு வரப்பட்ட ஏற்பாடுகள் இவ்வளவு காலமும் இந்தியாவினால் ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை?

இப்பொழுதும் கூட 13 மைனஸிற்குப் போயிருக்கிறது. அதில் பொலிஸ் அதிகாரங்கள் எல்லலாம் இல்லை. ஆகவே இந்தக் காலகட்டங்களை எல்லாம் விட்டு, இவற்றையெல்லாம் தொலைத்து விட்டு, இந்தியா ஒரு பாலம் அமைத்தல், எண்ணெய்குழாய் அமைத்தல் என்று அபிவிருத்தி திட்டங்ககளை அறிவிப்பதன் ஊடாகத் தமிழ் மக்களுக்கு ஓர் அரசி யல் தீர்வு கிடைக்குமென்று நாங்கள் நம்பவில்லை.

ஆகவே, தெளிவாக நாங்கள் ஒன் றைக் கூறிவைக்க விரும்புகிறோம். அதாவது இந்தியாவிலே இருக்கின்ற நிபுணர்கள், அரசியல் ஆய்வாளர்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவிலலே இருக்கின்ற தலைவர்களையும் நாங்கள் விநயயமாகக் கேட்பது நாங்கள் நிம்மதியாக, நிரந்தரமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்பது தான்.

தமிழர் பிரதேசங்களிலே இங்கு மெல்ல மெல்ல நிலம் பறிக்கப்படுகிறது. சுழிபுரம் பறளாய், கீரிமலை, குருந்தூர்மலை, வெடுக்குநாறி மலை என பறிக்கப்பட்டுக் கொண்டே போகிறது. நாங்கள் இங்கு வாழமுடியாமல் இடத்தை விட்டு நகர்ந்து கொண்டே இருக்கிறோம்.

ஆகையினால் முதலிலே நாங்கள் நிரந்தரமாக இந்த மண்ணிலே வாழக் கூடிய சூழலை இந்தியா உருவாக்கினால் அதற்குப் பிற்பாடு இந்தயாவின் அடுத்த கட்ட நடவடிக்கைகள், எண்ணங்களுக்கு நாங்கள் எதிர்மனப்பாங்கோடு இல்லை என்பதை தெளிவுபடுத்தத் தயாராக இருக்கிறோம். – என்றார்.

---

## வங்கி முறைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்நாடு வங்குரோத்து நாடு. தற்போதைய அரசாங்கத்திற்கு பிரச்சினைகளைத் தீர்த்து கொண்டு முன்னேறிச் செல்வதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. கடன் நீடிப்பு முயற்சிகளை நாம் முன்னெடுத்து வருகிறோம்.

கடந்த காலங்களில் நாட்டிற்கு வருகைத் தந்த தலைவர்களுடனும் அது குறித்துக் கலந்துரையாடினோம். கடன் நீடிப்பின் பின்னரும் எமது கடன்களை மீளச் செலுத்தாமல் இருக்க முடியாது. கடன் மீள்செலுத்துகைக்கான காலத்தை நீடித்துக்கொள்வதை மாத்திரமே செய்ய முடியும்.

அதேபோல் அத்தியாவசிய பொருள்களின் இறக்குமதிக்கு அவசியமான கடன்களையும் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். அந்த கடன்களை செலுத்துவதற்கான முறைமையொன்றும் அவசியம். தற்போது உள்ள சம்பிரதாய பொருளாதார முறையினால் அதனைச் செய்ய முடியாது.

அதனால் போட்டித்தன்மை மிக்க ஏற்றுமதி பொருளாதாரத்தை நாம் முன்னெடுக்க வேண்டும். இருப்பினும் அதற்கு முன்னதாகக் கடன் விவகா ரங்களை நாம் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

அதுகுறித்த யோசனைகளை அமைச்சரவையில் சமர்பித்துள்ள அதே நேரம் சர்வதேச நாணய நிதியம் மற்றும் எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம்.

அதேபோல் பல்வேறு தரப்புக்களிடத்தில் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். பின்னர் அந்த யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்பித்திருந்தோம். நாடாளுமன்றம் அரச நிதிக் குழுவிடம் ஆலோசித்த பின்னர் அதனை ஏற்றுக் கொள்வதற்கான யோசனை அரச நிதிக் குழுவினால் முன்வைக்கப்பட்டது.

கடன் நீடிப்பு பணிகளை செப்டெம்பர், ஒக்டோபர் மாதமளவில் நிறைவுச் செய்ய எதிர்பார்த்துள்ளோம். – என்றார்.

இதேவேளை கடன் மறுசீரமைப் புத் தொடர்பிலான யோசனைகள் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், கடன் நீடிப்புப் பணிகளை செப்டெம்பர், ஒக்டோபர் மாதமளவில் நிறைவுச் செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்த வேலைத் திட்டம் தடைப்பட்டால், வெளிநாடுகள் இலங்கையுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடா என்பதால் மீண்டும் நாட்டில் எரிபொருள் வரிசை, உரத் தட்டுப்பாடு என்பன உருவாகும் எனவும் ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

---

## இரகசியம் பரகசியம்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

றியே ரணில் வெற்றி பெற முடியும் என்று அவருக்குக் கயிறு கொடுத்து இருந்தார்கள் என்றும், அதை விழுங்கிய ரணில் நாங்கள் புலிகள் தரப்பில் இருந்து பெற்று வந்த சாத்தியமான இணக்கப்பாட்டு யோசனையை அதனால் தூக்கி எறிந்தார் என்றும் பின்னர் அறிந்து கொண்டேன்.

புலிகள் கேட்ட மாதிரி ஒரு கடிதத்தை ரணில் என்னிடம் தந்திருப்பாராயின் அன்று தேர்தலில் வடக்கு, கிழக்குத் தமிழர்கள் முழு அளவில் திரண்டு அவருக்கு வாக்களித்து இருப்பார்கள் என்பதையும், அவர் குறைந்தது மூன்று லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் அன்றே வென்று இருப்பார் என்பதையும் இப்போதும் கூட என்னால் உறுதியாகக் கூற முடியும்.

அது தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான பின்னர் என்னிடம் கூறிய கருத்துத் தெறிப்பையும், மேற்படி நான் கேட்ட கடிதத்தை வழங்காமல் தான் தவிர்த்ததற்கு இப்போது ரணில் கூறும் காரணத்தையும், நாளை குறிப்பிடுவேன். அத்தோடு இந்த விவகாரத்துக்கு இப்பத்தியில் முற்றுப்புள்ளி வைப்போம்.



# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தால் இராணுவ அதிகாரிக்குக் கௌரவிப்பு

(பழுவூரான்)

இராணுவத்தின் 231 ஆம் படைப் பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் திலுப்ப பண்டாரவின் சேவைகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வியாழக்கிழமை (03) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலகத்தில் நிகழ்வு இடம் பெற்றது.

இரண்டு வருடங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சேவை புரிந்த பிரிகேடியர், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்களால் கௌரவிக்கப்பட்டார்.

கொவிட்-19, எரிபொருள் தட்டுப்பாடு போன்ற நெடுக்கடியான காலங்களில் இவர் மாவட்ட செயலகத்துடன்





இணைந்து சேவையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரிகேடியர் திலுப்ப பண்டார மாவட்டத்தின் மக்கள் மத்தியில் நல்லுறவை ஏற்படுத்துவதற்காக அயாராது பாடுபட்டதுடன், இயற்கை விவசாயத்தை இராணுவத்தினர் மூலம் மேற்கொண்டு உற்பத்திகளை மக்களுக்கு வழங்கியிருந்தார்.

இராணுவத்தில் 32 வருடங்கள் சேவையாற்றிய பிரிகேடியர் உயர் கல்வியைத் தொடர்வதற்காக வெளிநாடு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, உதவி மாவட்ட செயலாளர் ஆ. நவேஸ்வரன் மற்றும் பதவிநிலை அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கடும் வரட்சி நிலை காரணமாக கால்நடை வளர்ப்பில் பாதிப்பு



(அ.அஸ்வர்)

நாட்டில் தற்பொழுது நிலவும் கடும் வரட்சி காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் பாரிய இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று கவலை தெரிவிக்கின்றனர்.

உரிய காலத்தில் பருவ மழை பெய்யாத நிலையில் பல இடங்களில் நீர்ப்பாசனக் குளங்கள், கிணறுகள், வாய்க்கால்கள் உள்ளிட்ட நீர்நிலைகள் நீரின்றி வரண்டு போயுள்ளன. கால்நடைகளை ஆறுகள் உள்ள தூர இடங்களுக்கு கொண்டு சென்றே நீர் காட்ட வேண்டியுள்ளது என்று கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடும் வரட்சியால் மேய்ச்சல் தரைகள் யாவும் முற்றாக வரண்டு புல் பூண்டுகள் கருகிக் காணப்படுவகின்றன. போதிய வருவாய் இன்மையால் தீவனம் கொள்வனவு செய்து வைக்க முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இதனால் போதிய உணவுகள் இல்லை. கால்நடைகள் தேய்ந்து எலும்பும் தோலுமாக காட்சியளிக்கின்றன. இதனால் பாலுற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது தமது பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

பாரிய வெள்ளம், வரட்சி, இடிமின்னல் தாக்கம், தொற்று நோய் உள்ளிட்ட அனர்த்தங்களின் போது தமது தொழில் துறை பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் பதிலீடாக எந்தவொரு அரச நிவாரணங்களும் தமக்கு வழங்கப்படுவதில்லை என விசனம் தெரிவிக்கின்றனர் கால்நடை வளர்ப்பாளர்கள்.

எதிர்காலத்திலாவது இது தொடர்பாக அரசு கவனம் செலுத்தி, தேசிய உற்பத்தியில் கணிசமான பங்களிப்புச் செய்யும் தமக்கு முடியுமான உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.

# நாடாளுமன்ற உணவகத்தில் திருட முற்பட்ட நபர் கைது!



நாடாளுமன்ற உணவகத்தில் இருந்து ஜாம்போத்தல் மற்றும் ரின்பால் ஆகியவற்றை திருட முற்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் சமையல்காரர் ஒருவர் நாடாளுமன்ற பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (04) கைது செய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற பிரதான நுழைவாயிலில் அவர் சென்றவேளை சந்தேகமடைந்த பொலிஸார் அவர் சென்ற மோட்டார் சைக்கிளை நிறுத்தி அவர் வைத்திருந்த பொதியை சோதனை செய்தவேளை அதிலிருந்து மேற்படி பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வெலிக்கடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, நாடாளுமன்ற சமையலறையில் உணவுப் பொருள்களை வீசியதற்காக பல ஊழியர்கள் நாடாளுமன்ற பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். சம்பவம் தொடர்பில் வெலிக்கடைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

NORTH WALL
ENGINEERING

யாழ் மண்ணில்

அனைத்து

கட்டுமான

தேவைக்கும்!!!

சேவைக்கும்!!!

நோர்த் வோல்

என்ஜினியரிங்

Nelliady, Karaveddy
Jaffna.

0777818208
0774002766

# அவசர மருந்துக் கொள்வனவை முற்றாக நிறுத்த நடவடிக்கை

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



கொழும்பு, ஓக.05

எதிர்வரும் சில மாதங்களுக்குள் அவசர மருந்து கொள்வனவுகளை முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நாட்டின் மருந்துத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் மாத்திரம் அவசர கொள்வனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார் என்று கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் குறைபாடுகள் குறித்து எழுத்துள்ள குற்றச்சாட்டு தொடர்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கருத்து தெரிவிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்குள் இருந்த பிரச்சினைகள் தற்போது முற்றாக தீர்க்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# 119 அவசர சேவை எண்ணை தவறாக பயன்படுத்தினால் சிறை



கொழும்பு, ஓக.06

இலங்கை பொலிஸ் அவசர சேவை தொலைபேசி எண்ணான 119 எனும் எண்ணை தவறாக பயன்படுத்துபவர்களுக்கு சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இந்த அவசர இலக்கமானது 24 மணி நேரமும் இயங்கி வருகிறது.நாளாந்தம் 3,000 முதல் 3,500 வரை இதற்கு அழைப்பு வருகிறது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய குறிப்பிட்ட கால இடைவெளியில் தரவுகளை ஆய்வு செய்த போது, சில நபர்கள் இந்த வசதியை தவறாகப் பயன்படுத்தியதைக் கண்டறிந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்கள் அவசர சேவை, அதிகாரிகள் அவசர சேவை மற்றும் அத்தியாவசியமான சம்பவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புக்களுக்கு இடையூறாக அமையும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவசர மற்றும் அத்தியாவசியமான சம்பவங்கள் குறித்து முறைப்பாடு தெரிவிப்பதற்கு மாத்திரம் அவசர தொலைபேசி எண்ணை பயன்படுத்துமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள 11 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கை

## விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பீ. டி. சில்வா தகவல்



இலங்கையில் எதிர்காலத்தில், உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதை எதிர் கொள்ளும் வகையில் 11 ஆயிரம் ஏக்கர் தரிசு வயல் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள இலங்கை அரசு தீர்மா னித்துள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பீ. டி. சில்வா இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

விவசாய அபிவிருத்தி திணைக்களத் தின் ஊடாகக் குறித்த தரிசு வயல் நிலத் தைச் சுத்தப்படுத்தும் வேலைத் திட்டம் இடம்பெறவுள்ளது. இதற்காக 420 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் எமது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஒரு துறையாக விவசாயம் காணப்படுகின்றது. அதிபர் ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதன் பின் னர் படிப்படியாக இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. அதற்கு நாம் அனைவரும் அவருக்கு நன்றி தெரி விக்க வேண்டும்.

இந்தியாவும் பாகிஸ்தானும் தற் போது அரிசி ஏற்றுமதியைத் தற் காலிகமாக இடைநிறுத்தியுள்ளன. எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ள உலக உணவு நெருக்கடியை எதிர்கொள்ள அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர். எனவே, ஒரு நாடு என்ற வகையில், இந்த நெருக்கடியை எதிர்கொள்ள நாமும் தயாராக வேண்டும்.

நாட்டின் விவசாயத் துறையை மேம்படுத்துவதை அரசால் மாத்திரம் செய்ய முடியாது. அதற்கு அனைவரின் ஆதரவும் அவசியம்.

அதிபரின் பணிப்புரையின் பேரில் அண்மையில் பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் ஊடாக நெல் கொள்வனவு செய்யப்பட்டது. அதன் மூலம் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அரிசி வழங்கப்பட்டது.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக நெல் கொள்வ னவை இடைநிறுத்தியிருந்த நெல் சந்தைப்படுத்தல் சபை, அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் மீண்டும் முறையான வழிமுறைகள் ஊடாக நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

கொள்வனவு செய்யப்படும் நெல் கையிருப்பை களஞ்சியப்படுத்த நாடு முழுவதும் களஞ்சிய சாலைகள் திறக் கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் எமது நாட்டில் அரிசி மேலதிக கையிருப்பு இருந்தது. நாட்டில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டது. இதனால் அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வருடம் விளைச்சல் அதிகரித் துள்ளதால் மீண்டும் பழைய நிலைக்கு மீளலாம்.

எமது நாட்டின் பயன்பாட்டுக்கு சுமார் 24 லட்சம் மெட்ரிக் தொன் அரிசி தேவைப்படுகிறது. அந்த வகை யில் தற்போது முன்னெடுக்கப்படும் முறையான பொறிமுறைகளின் மூலம் எதிர்காலத்தில் எமது நாடு அரிசி உற்பத் தியில் தன்னிறைவு அடையும் என்று எதிர்பார்க்கின்றோம்.

சிறு தானியங்களான சோளம், உழுந்து, பயறு உள்ளிட்ட மேலதிக பயிர்களின் விளைச்சலை அதிகரிக்க விவசாய அமைச்சரின் ஆலோசனையின் பேரில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப் பாக வடக்கு, கிழக்கு மாகாணங்க ளில் உழுந்து, பயறு ஆகியவற்றைப் பயிரிடும் பணிகள் நடைமுறைப்படுத் தப்பட்டு வருவதால் எதிர்காலத்தில் உழுந்து பயறு ஆகிய பயிர்களுக்குப் பற்றாக்குறை ஏற்படாது.

நாட்டில் தற்போது இளைஞர்கள் படிப் படியாக விவசாயத்திலிருந்து விலகி வருகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வரவு செலவுத் திட்ட அறிக்கை உரையில் குறிப்பிட்ட படி, விவசாயத் துறைக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விவசாயத் துறையில் இளைஞர் சமு தாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இளைஞர் தொழில் முனைவோர் விவசாய கிராமங்களை நிறுவும் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அதற்காகப் பயன்படுத்தப்படாத அரச காணிகளை இளைஞர்களுக்கு விவசாயத்துக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய விவசாயக் கொள்கையை திருத்தங்களுடன் தயாரிக்கும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளது. இது எதிர் காலத்தில் அமைச்சரவையில் சமர்ப்பிக் கப்படும். விவசாயக் கொள்கையின் ஊடாக இந்த நாட்டின் விவசாயத் துறை யின் முன்னேற்றத்துக்குப் பாரியளவு பங்களிப்புச் செய்ய முடியும்.– எனக் குறிப்பிட்டார்.

# பொன்னாலை பாடசாலையில் புதிய நூலகம் திறந்து வைப்பு



பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையில் அமைக்கப்பட்ட புதிய நூலகம் நேற்று சனிக்கிழமை காலை திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூ ரியின் பழைய மாணவர்களையும் அவர்களுடன் இணைந்த நண்பர்களை யும் உள்ளக்கிய குழுவினரின் வழிப் படுத்தலில், சமூக செயற்பாட்டாளர் சபா.தனுஜனின் ஒழுங்குபடுத்தலில், அமரர் திருமதி பரமேஸ்வரி செல்ல காந்தனின் நினைவாக இந்த நூலகம் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

நூலகத்துக்குரிய தளபாடங்கள், நூல் கள்மற்றும்பொருள்கள்என்பனஉள்ளடங் கலாக சுமார் 10 லட்சம் ரூபா செலவில் இந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு உரிய நூல்கள் மட்டுமன்றி ஆசிரியர்களுக்குரிய நூல் களும், கற்றல் கற்பித்தல் வழிகாட்டி நூல்களும் இந்த நூலகத்தில் வைக் கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் தி.மோகனபாலன் தலைமையில் நடைபெற்ற நூலகத் திறப்புவிழா நிகழ்வில் திட்ட ஒருங்கி ணைப்பாளர் ஏ.எஸ்.கோகுலேந்திரா உட்படநூலகஉருவாகத்தில்ஒத்துழைத்த பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் குழுவினர் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை யுடன் சேர்த்து இதுவரை ஆறு பாடசாலை களுக்கு நூலகங்களை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.08.2023




இன்று நீங்கள் பொறுமையிழந்து காணப்படுவீர்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மூலம் ஆறுதல் பெறலாம். தேவையற்ற வார்த்தைகளைத் தவிர்க்க கவனமாக உரையாட வேண்டும்.

அதிகப் பணிகள் காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பணியில் தவறுகள் குறைய வாய்ப்புள்ளது.

குறைந்த புரிந்துணர்வு உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நீங்கள் அமைதியாகக் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று சுறுசுறுப்பாக உணர மாட்டீர்கள். யோகா பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம்.




இன்று இனிமையான தருணங்கள் காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் வர வாய்ப்புள்ளது. முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

பணியிடத்தில் சாதகமான பலன்கள் காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பதன் மூலம் உங்கள் செய்திறன் நிரூபணமாகும். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

நல்ல புரிந்துணர்வின் காரணமாக உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனைத் தொடர்ந்து பராமரியுங்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். கையிலிருக்கும் உபரி பணத்தை சேமிக்கும் வாய்ப்பு காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களுக்கு எந்த ஆரோக்கியப் பிரச்சினையும் இருக்காது.




இன்று நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். இன்று கூடுதல் நன்மைகள் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். மேலதிகாரிகள் உங்கள் செயற்றிறனைப் பாராட்டுவார்கள். தொடர்ந்து சிறப்பாக பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடத்துக்குச் செல்வீர்கள். இருவரும் பரஸ்பரம் கருத்துக்களைப் பகிர்ந்து மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பண வரவு அதிகமாக இருக்கும். இதனால் உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும். இந்த வாய்ப்பை பயன்படுத்தி உங்கள் எதிர்காலத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




இன்று சவால்கள் நிறைந்து காணப்படலாம். மனக் குழப்பங்களை எதிர்கொள்ள நேரலாம். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இறுக்கமான பணிகளை முடிக்க திட்டமிடல் அவசியம்.

உங்கள துணையிடம் அமைதியாகப் பேசுவதன் மூலம் நீங்கள் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இயலும். அவரிடம் இனிமையாகப் பழக முயலுங்கள்.

பண வரவு குறைந்து காணப்படும். சூழ்நிலையை சமாளிக்க கவனமாக பணத்தை கையாள வேண்டும்.

அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் வகை உணவுகளை தவிர்ப்பதன் மூலம் இந்தச் சூழ்நிலையைக் கட்டுப்படுத்தலாம்.




இன்று சாதகமான நாளாக அமையாது. பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். நற்பலன் காண உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

குறித்தநேரத்தில் பணியை முடிப்பது கடினமாக இருக்கும். அதிகப் பணிகள் காரணமாக நீங்கள் மேற்கொள்ளும் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. நீங்கள் இருவரும் கலந்தாலோசித்துக் குடும்பப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். அதிக செலவுகள் கவலையை அளிக்கும்.

பல் வலி வர வாய்ப்புள்ளதால் இன்று பற்களில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந்திருக்கும். திரைப்படம் பார்த்தல், இசை கேட்டல் போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். முன்கூட்டிய திட்டமிடல் மூலம் பணிகளை சரியாக பராமரிக்கலாம். இதனால் அமைதியான மனநிலையில் இருப்பீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகள் பேசி நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் திருப்தியான உறவு உள்ளது என்பதை இது உறுதிப்படுத்தும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




இன்று நீங்கள் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் காணப்படுவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் புதிய வாய்ப்புகளும் வளர்ச்சியும் காணப்படும். இதனால் திருப்தியான மனநிலை காணப்படும். உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத் தேவைக்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். முக்கிய முடிவுகள் எதையும் இன்று எடுக்காதீர்கள். அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எனவே பணிகளை கவனமாகக் கையாளவும். இன்றைய பணிகளை மேற்கொள்ள திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்பப் பிரச்சினை ஒன்றில் உங்கள் துணையை நீங்கள் சமாளிக்க இயலாத நிலை இருக்கும். நீங்கள் வேறுபாட்டை ஒதுக்கித் தள்ளி உங்கள் துணையுடன் புதிய பாதையில் பயணிக்க வேண்டும்.

இன்று அதிக செலவுகளால் வருத்தப்படுவீர்கள். இன்று உங்களால் சேமிக்க இயலாது.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்க நீங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.08.2023




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்க உகந்த நாள் அல்ல. என்றாலும். ஆன்மீக ஈடுபாடு மற்றும் இறை வழி பாடு மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை சிறப்பாக மேற் கொள்ள கவனமும் விழிப்பும் தேவை. உங்கள் பாதையில் சில தடைகள் காணப்படும். சிறந்த பலன் காண திட்டமிட வேண்டியது அவசியம்.

வேறுபட்ட மனநிலை சவாலாக காணப்படும். என்றாலும் பரஸ்பரம் வேறுபாட்டை களைந்து சுமூகமாக பிரச்சினைகளை தீர்ப்பது நல்லது.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். அதிக செலவுகளை விவேகத்துடன் கையாள வேண்டும். முடிந்த அளவு சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டும்.

உங்களிடம் பதட்டமான நிலை காணப்படும்.




இன்று உங்கள் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும். என்றாலும் தேவை யற்ற விஷயங்களுக்கு வருந்தாதீர்கள். புத்திசாலித் தனத்தை பயன்படுத்தி சாதகமான பலன்களைக் காணுங்கள்.

பணியில் தவறுகள் நேராமல் இருக்க கவனம் அவசியம். எனவே உங்கள் பணிகளை சரி பார்த்து தவறின்றி வழங்கவும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் சுமூகமான சூழ்நிலை காணப்படும். இருவரும் குடும்ப பிரச்சிணைகளை தீர்த்துக் கொள்வீர்கள்.

பண வரவு எதிர்பார்த்த அளவிற்கு காணப்படாது. இன்று நிதி சம்பந்தப்பட்ட எந்த முக்கிய முடிவுகளையும் எடுக்க வேண்டாம்.

சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க குளிர் பானங் களை தவிர்க்கவும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். நற்பலன்கள் நடக்கும் நாள். உங்கள் முயற்சிகளுக்கு பலன் கிடைக் கும்.இன்றைய செயல்கள் எளிதாக நடக்கும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியி டங்களுக்கு செல்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக வும் உற்சாகமாகவும் இருப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டம் நிறைந்து காணப்படும். பண வரவு அதிகமாக இருக்கும். உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயர்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




இன்று அனுகூலம் சற்று குறைந்து காணப்படும். பாதகமான பலன்களால் கவலை காணப்படும். என்றாலும் மனதை மகிழ்சியாகவும் அமைதியாகவும் வைத் துக் கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் சிறிது மந்தமாக இருக்கும். சில பிரச்சினைகள் எழ வாய்ப்புள்ளதால் நீங்கள் சக பணியாளர்களுடன் கவனமாகப் பழக வேண்டும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சற்று கடின மாக இருக்கும்.

நீங்கள் உங்கள் கருத்துகளை உங்கள் துணையிடம் வெளிப்படையாக பகிர மாட்டீர்கள். இதனால் உங்கள் துணையின் நம்பிக்கை உணர்வு பாதிக்கப்படும். எனவே இந்தப் போக்கைத் தவிர்த்துச் சிறப்பாக நேரத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

# குழுக்களுக்கு இடையே மோதல்: குடும்பஸ்தர் அடித்து படுகொலை!

கொழும்பு, ஓக.06

இரண்டு குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற மோதலில் இளம் குடும்பஸ்தர் ஒரு வர் அடித்துப் படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு பாதுக்கை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (04) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

29 வயதுடைய எச்.எம். முஷாரப் என்ப வரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் படுகாய மடைந்த இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் தொடர்பில் நால்வரைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கல்முனையில் இலவச வைத்திய சிகிச்சை முகாம்




(ஏ.எல்.எம்.)

இலங்கை மார்க்கய சகோரத்துவ (ஐக்கிய) அமைப்பும், கொழும்பு மெகா சிற்றி லயன்ஸ் கழகமும் இணைந்து கல்முனையில் இலவச வைத்திய சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தின.

கல்முனை நகர லயன்ஸ் கழகம் மற்றும் கல்முனை பரலோகவாசல் தேவ சபை என்பன இணைந்து இலவச சிகிச்சை முகாமுக்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தன.

கல்முனை பரலோக வாசல் தேவ சபை இளைஞர் மண்டபத்தில் வறிய மக்களுக் குப் பெரும் பயனளிக்கும் வகையில் இடம்பெற்ற இந்த இலவச வைத்திய சிகிச்சை முகாமில் தென்கொரியாவைச் சேர்ந்த வைத்தியக் குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

சிகிச்சை முகாமுக்கான சிறந்த ஏற்பாடு களை கல்முனை பரலோக வாசல்தேவ சபையின் வணக்கத்துக்குரிய போதகர் ஏ.கிருபைராஜா, கல்முனை நகர லயன்ஸ் கழகத் தலைவர் பொறியியலாளர் லயன். எஸ்.சுதர்சன் ஆகியோர் தலைமையி லான குழுவினர் செய்திருந்தனர்.

நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர ஐ.எல்.எம்.றிபாஸ், பிரதிப் பணிப்பாளர் டாக்டர். எம்.பி. அப்துல் வாஜித், கொழும்பு மெகா சிற்றி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் சந்திர குலவன்ஸ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பொன்னாலை ஊடாகக் கடத்தப்பட்ட பெருந்தொகையான கஞ்சா பிடிபட்டது

## 350 தொடக்கம் 400 கிலோ வரை இருக்கலாம்




பொன்னாலை ஊடாகக் கடத்தப்பட்ட சுமார் 350 தொடக்கம் 400 கிலோகி ராம் வரையான கஞ்சா பொன்னாலை இளைஞர்களால் நேற்று மடக்கிப் பிடிக் கப்பட்டது.

கஞ்சா கடத்தியவர்களில் ஒருவரும் பிடிக்கப்பட்டார். ஏனையவர்கள் தப்பி யோடியுள்ளனர்.

பிடிபட்டவர் பண்டாரவளையை சேர்ந்த வர் எனவும், பண்டத்தரிப்பு – மாதகல் பிரதேசத்தில் திருமணம் செய்தவர் எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவித்தார்.

பொன்னாலை பரவைக்கடல் ஊடாக கடத்திவரப்பட்ட கஞ்சா, பொன்னாலைச் சந்திக்கும் வரதராஜப் பெருமாள் ஆல யத்திற்கும் இடையில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் ஏற்றப் பட்டபோதே சிக்கியது.

அந்தக்ஷ்வாகனத்தின் செயற்பாட்டில் சந்தேகமடைந்த அப்பகுதி இளைஞர்கள் அதை சோதனையிட முற்பட்டபோதே கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது.

சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் பொன்னாலை இளைஞர்கள் இரவு பகலாக தொடர் விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையிலேயே பெருந்தொகை கஞ்சா கைப்பற்றப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த விடயம் தொடர்பாக வட்டுக் கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டது. சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிசாரிடம் வாகனத்துடன் கஞ்சாவும் ஒப்படைக்கப்பட்டது. பிடிபட்ட நபரும் கைய ளிக்கப்பட்டார்.

# அக்கராயன் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

கிளிநொச்சி பகுதியில் இருந்து அக்க ராயன் நோக்கிப் பயணித்த கப் ரக வாகன மும் அக்கராயன் பகுதியில் இருந்து கிளி நொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் வேலு செல்வகுமார் (வயது – 40) என்பவரே படுகாயமடைந்த நிலை யில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட பொழுது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள் ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கப் ரக வாகன சாரதி கைது செய் யப்பட்டுள்ளார். அக்கராயன் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## மின் கட்டணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழு வின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவிக்கையில் –

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் மின்சார சபையிடமிருந்து கோரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. மின் கட்டண திருத்தம் வருடத்திற்கு இரண்டு முறை மாத்திரமே – அதாவது 06 மாதங்களுக்கு ஒரு முறை மட்டுமே இடம்பெறுவதாகக் குறிப்பிட்டார்.

மின்சாரக் கட்டணத்தைத் திருத்து மாறு இலங்கை மின்சார சபை இந்த வருடத்தில் மூன்றாவது தடவையாக ஆணைக்குழுவிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக நேற்று முந்தி னம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் மின்சார பாவனையாளர் சங்கம் தெரிவித்திருந்தது.

எனினும், இவ்வருடம் மின் கட்டண திருத்தம் இடம்பெறாது என பேராசிரி யர் மஞ்சுள பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

# ஹரியாணாவில் தொடரும் கட்டட இடிப்பு: மூன்றாவது நாளில் 20 கடைகள் அழிப்பு!

கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஹரியாணா மாநிலத்தின் நூ நகரில் மூன்றாவது நாளாக நேற்றும் கட்டட இடிப்பு நடவடிக்கை தொடர்ந்தது. ஒரே நாளில் 20 இற்கும் மேற்பட்ட கடைகள் இடிக்கப்பட்டன.



ஹரியாணா மாநிலம் நூ மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை விஸ்வ இந்து பரிஷத் ஊர்வலத்தை தடுக்க முயன்றதால் ஏற்பட்ட மோதல், கலவரமாக மாறி, பக்கத்து மாவட்டங்களுக்கும் பரவியது. இதில் ஊர்க்காவல் படையை சேர்ந்த இருவர் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். வாகனங்கள், கடைகள், உணவகங்கள் உள்ளிட்ட சொத்துகள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

இதனையடுத்து நூ நகரில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் டாரு என்ற இடத்தில் வசித்த புலம்பெயர்ந்த குடும்பங்களின் சுமார் 250 குடிசைகள் கடந்த வியாழக் கிழமை மாலையில் இடித்து அகற்றப்பட்டன. இது, அரசு நில ஆக்கிரமிப்பாளர்கள் மீதான நடவடிக்கை மட்டுமின்றி, கலவரக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கையாகவும் கருதப் படுகிறது.

இந்த நிலையில், மூன்றாவது நாளான நேற்று பல்வேறு இடங்களில் கட்டட இடிப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

குறிப்பாக, ஷாஹீத் ஹசன் கான் மேவாதி அரசு மருத்துவக் கல்லூரி முன்னால் இருந்த பல கடைகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. கல்லூரியின் முன்பக்க வாயிலுக்கு எதிராக இருந்த கடைகள் இடிக்கப்பட்டன. இவை அனைத்தும் அதேபகுதியில் பல ஆண்டுகளாக அங்கேயே இருந்த கடைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் மாவட்டத்தின் பல பகுதிகளிலும், மாவட்ட நிர்வாகத்தின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கட்டட இடிப்பு இடம்பெற்று வருகிறது. இதுவரை 50 முதல் 60 கட்டடங்கள் இடிக்கப்பட்டுள்ளன.

## ஜம்மு காஸ்மீரில் தீவிரவாதிகளுடன் மோதல்: இந்திய இராணுவத்தினர் மூவர் உயிரிழப்பு

இந்தியாவின், ஜம்மு காஷ்மீர் பகுதியில் பயங்கரவாதிகளுடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கி சூட்டில் 3 இராணுவ உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அந்த நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் ஹாலன் வனப்பகுதியில் பயங்கரவாதிகளின் நடமாட்டம் காணப்படுவதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய பாதுகாப்பு படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, பாதுகாப்பு தரப்பினரை நோக்கி பயங்கரவாதிகள் நடத்திய பதில் தாக்குதலில் மூவர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பகுதியில் தொடர்ந்தும் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறுவதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

## உலக உணவுப் பாதுகாப்பின்மை: இந்தியா விடுத்துள்ள கோரிக்கை!

இலங்கைக்கான உணவு ஆதரவை இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஏற்கனவே இந்தியா, இலங்கை, மியன்மார் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு ஆயிரக்கணக்கான மெட்ரிக் தொன் கோதுமை, அரிசி, பருப்பு வகைகள் மற்றும் உணவு உதவிகளை வழங்கியுள்ளது.



இந்தநிலையில் உலகளாவிய உணவுப் பாதுகாப்பின்மை நிலைமை அச்சுறுத்தலாக இருப்பதாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புசபையில் இந்தியா அறிவித்துள்ளது.

எனவே குறித்த நாடுகளுக்கு உதவ சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்று பாதுகாப்பு சபைக்கான இந்தியாவின் தூதுவர் ருச்சிரா காம்போஜ் எடுத்துரைத்தார்.

ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டின்படி, 62 நாடுகளில் 362 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது.

எனினும் உணவு உதவியை நீண்ட கால அடிப்படையில் முன்னெடுக்க முடியாது என்று காம்போஜ் வலியுறுத்தி னார்.

## இல்லாத ஊருக்கு வழி தேடும் ஸ்டாலின்!

காவிரி நீர் விவகாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இல்லாத ஊருக்கு வழி தேடுகிறார் என எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில்,

என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்' என்று, நம் நானிலத்தின் பெருமையை உயர்த்திப் பாடினார் எம்.ஜி.ஆர். ஆனால், ஆளும்போதெல்லாம் மக்களை எல்லா விதத்திலும் கையேந்த வைப்பதையே தொழிலாகக் கொண்டு செயல்பட்டு வரும் தி.மு.கவும், அதன் அரசும், நம் அண்டை மாநிலமான கர்நாடகத்திடம் காவிரி நீருக்காக கையேந்த வைக்கக்கூடிய அவல நிலையை ஏற்படுத்தியது வெட்கக் கேடானதாகும்.

பல்வேறு சட்டப் போராட்டங்களை நடத்தி, காவிரியில் உள்ள நமது உரிமையை மீட்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 31 ஆண்டுகால அரசு. ஆனால் காவிரி நதிநீர் தொடர்பாக கர்நாடாவுக்கும், தமிழகத்துக்கும் இருந்த ஒப்பந்தத்தை புதுப்பிக்காமல் தமிழகத்தை வஞ்சித்தது தி.மு.க. அரசு என்று தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவின் கருங்கடல் கடற்படை மீது இரண்டாவது முறையாக தாக்குதல!

ரஷ்யாவின் கருங்கடல் கடற்படை மீது,24 மணி நேரத்தில் இரண்டாவது முறையாக பாரிய தாக்குதலை உக்ரைன் முன்னெடுத்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

கடல் ட்ரோன்களால் ஊடாக ரஷ்யா மற்றும் சிரியாவுக்கு இடையே வெடிமருந்துகளை ஏற்றிச் சென்ற,4,754 தொன் ரஷ்ய டேங்கர் கப்பல் மீதே குறித்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலால் 463 அடி நீளம் கொண்ட அந்த எண்ணெய் மற்றும் இரசாயன டேங்கர் கப்பலானது மூழ்கும் அபாயத்தில் காணப்பட்டுள்ளதுடன் கப்பல் என்ஜின் அறை முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது என கப்பல் ஊழியர்கள் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை கட்டுப்பாட்டு அறை பகுதியளவில் சேதமடைந்ததால், 11 பேர் கொண்ட குழுவினர் கண்ணாடி உடைந்து சிராய்ப்புகளால் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் உக்ரைன் கடற்படையின் ஒருங்கிணைப்புடன் 450 கிலோ ரி.என்.ரி வெடிமருந்தை பயன்படுத்தி, தாக்குதலை முன்னெடுத்துள்ளது என தெரிவிக்கின்றனர்.

2019 இல் இருந்தே சிரியா விவகாரம் தொடர்பில் சர்வதேச கடற்பகுதியில் இந்த கப்பலுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# நடமாடும் சுடுகாட்டில் உடல் தகனம்!



ரஷ்யா தன் தரப்பு இழப்புகளை மறைப்பதற்காக,போரில் உயிரிழக்கும் இராணுவ வீரர்களை நடமாடும் சுடுகாட்டில் தகனம் செய்துவிடுகிறது என உக்ரைன் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த இராணுவ வீரர்களின் உடல்களை ரஷ்யா உக்ரைனில் வைத்தே தகனம் செய்துவிடுவதாகவும் உக்ரைன் இராணுவ தரப்பு தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கும் உக்ரைன் நகரமான மெலிட்டபோலில் நடமாடும் தகன வாகனம் ஒன்று நிறுத்தப்பட்டுள்ளதாகவும் உயிரிழந்த ரஷ்ய இராணுவ வீரர்களின் உடல்கள் ட்ரக்குகள் மூலம் அங்கு கொண்டு வரப்படுவதாகவும், அங்கு வைத்தே அந்த உடல்கள் தகனம் செய்யப்படுவதாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

அந்த தகன வாகனத்தில் தொடர்ந்து உடல்கள் தகனம் செய்யப்பட்டுக்கொண்டே இருப்பதால், எப்போதும் அந்த பகுதியில் துர்நாற்றம் வீசிக்கொண்டே இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. போரில் ரஷ்ய தரப்பில் உயிரிழப்புகள் தொடர்வதாகவும் இழப்புகளை மறைப்பதற்காகவே ரஷ்யா இவ்வாறு செயற்படுவதாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

# பிரித்தானியாவில் புயல்: மக்களுக்கு எச்சரிக்கை!

பிரித்தானியாவுக்கு புயல் தொடர்பில் வானிலை ஆராய்ச்சி மையம் பல்வேறு எச்சரிக்கைகளை விடுத்துள்ளது.

ஆண்டனி புயல் என பெயரிடப்பட்டுள்ள புயல் பிரித்தானியாவை தாக்கியுள்ளது.

லண்டன் உட்பட தென்கிழக்கு இங்கிலாந்தில் விடுக்கப்பட்டுள்ள இடியுடன் கூடிய மழைக்கான மஞ்சள் எச்சரிக்கைகள் முடிவடையும் எனவும், கார்டிஃப் மற்றும் பாத் உள்ளிட்ட மேற்குப் பகுதிகளில் மஞ்சள் காற்று எச்சரிக்கை ஞாயிற்றுக்கிழமை வரை ஒரே இரவில் காற்றின் வேகம் குறையும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், தென்மேற்கு இங்கிலாந்தின் சில பகுதிகளுக்கு காற்று தொடர்பில் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மணிக்கு 65 கிலோமீற்றர் வேகம் வரையில் பலத்த காற்று வீசலாம் என்றும், காற்றில் பறக்கும் பொருட்களால் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

எனவே பொது மக்கள் வாகனங்களில் வெளியில் செல்லவோ அல்லது தேவையற்ற பயணங்களை மேற்கொள்ளவோ வேண்டாம் என்றும், வாகன சாரதிகள் கவனத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# புடினை விமர்சித்தவருக்கு 19 ஆண்டுகள் சிறை தண்டனை!

ரஷ்ய ஜனாதிபதி புதினை கடுமையாக விமர்சித்த எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸி நவல்னிக்கு மேலும் 19 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நிதி மோசடி வழக்கில் பதினொன்றரை ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், மேலும் ஏழரை ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது அரசுக்கு எதிராக கிளர்ச்சியை ஏற்படுத்தி, அமைதியை சீர்குலைக்க முயற்சிப்பதாக குற்றம்சாட்டி,19 ஆண்டுகள் தண்டனை விதித்து ரஷ்ய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதனை கடுமையாக கண்டித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியுள்ளது.